செ.வெ.எண்.43/2021 நாள்: 24.06.2021

## திருப்பூர் மாவட்டம்

## அவிநாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1430-ம் பசலி ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித்தலைவர் / வருவாய் தீர்வாய அலுவலர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டாட்சியர் அலுவலகத்தில், இன்று (24.06.2021) 1430-ம் பசலி ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித்தலைவர் / வருவாய் தீர்வாய அலுவலர் டாக்டர். எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 9 வட்டங்களிலும் 1430-ம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) இன்று (24.06.2021 மற்றும் நாளை 25.06.2021) நடைபெற உள்ளது. வருவாய்த் தீர்வாயம் என்பது ஒவ்வொரு பசலி ஆண்டிற்கும் கிராம நிர்வாக அலுவலர் பராமரிக்கும் கிராமக் கணக்குகள் சரியாக உள்ளனவா என ஆய்வு செய்தும், அதை சரியாக உள்ளன என உறுதி செய்து, அதன் அடிப்படையில் கிராமத்தில் நிலவரி மற்றும் பல்வகை அரசு வருவாயை நிர்ணயம் செய்து முடிவு செய்திடும் பணியாகும். மேலும், இதன் தொடர்ச்சியாக வருவாய்த் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) மக்கள் தொடர்பு பணியும் விரிவுபடுத்தப்பட்டு, கிராம மக்கள் வருவாய்த் தீர்வாய அலுவலரிடம் நேரடியாக மனுக்கள் கொடுத்து, உடனடியாக அதை பரிசீலனை செய்து, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகிறது. ஆக வருவாய்த் தீர்வாயம் என்பது மக்கள் சேவையில் ஒரு அங்கமாக அமைந்துள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி, கொரோனா நோய் தொற்று காரணமாக, 1430-ம் பசலி (2020-2021) ஆண்டிற்கான வருவாய் தீர்வாய (ஜமாபந்தி) மனுக்களை இணைய வழி மற்றும் இ-சேவை மையங்கள் மூலமாக பதிவேற்றம் செய்து மட்டுமே உரிய தீர்வு காணப்படவுள்ளது. அதன் அடிப்படையில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 9 வருவாய் வட்டங்களில் கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றை கட்டுப்படுத்தும் விதமாக பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் தொடர்பான வருவாய தீர்வாய மனுக்களை அளித்திட வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நேரில் வராமல், பொதுமக்கள் வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, பட்டா மாறுதல், அனைத்து விதமான இணையவழிச் சான்றுகள் உள்ளிட்ட இதர கோரிக்கை மனுக்களை **https://gdp.tn.gov.in/jamabandhi** என்ற இணைய வழி மூலமாகவும் அல்லது பொது **இ-சேவை மையம்** மூலமாகவும் **31.07.2021** வரை பதிவேற்றம் செய்து , இணைய வழி மற்றும் இ-சேவை மையங்கள் மூலமாக பெறப்படும் மனுக்களை பரிசீலனை செய்து மனுதாரருக்கு உரிய தகவல் வழங்கப்படும்.

அதனடிப்படையில் , அவிநாசி வட்டத்தில், இன்று (24.06.2021 மற்றும் நாளை 25.06.2021) நடைபெறவுள்ள வருவாய்த் தீர்வாயத்தின் (ஜமாபந்தி) முதல் நாளான இன்று சேவூர் உள்வட்டத்திற்குட்பட்ட பொங்கலூர், ஆலத்தூர், மங்கரசவலையபாளையம், குட்டகம், போத்தம்பாளையம், புலிப்பார், தத்தனூர், புஞ்சைத்தாமரைக்குளம், வடுகபாளையம், பாப்பாங்குளம், சேவூர், தண்டுக்காரன்பாளையம், முறியாண்டாம்பாளையம், கானூர் மற்றும் அவிநாசி மேற்கு உள்வட்டத்திற்குட்பட்ட இராமநாதபுரம், வேட்டுவபாளையம்,

நம்பியாம்பாளையம், கருவலூர், உப்பிலிபாளையம், தெக்கலூர் ,செம்பியநல்லூர், வேலாயுதம்பாளையம், புதுப்பாளையம் (வடக்கு) மற்றும் புதுப்பாளையம் (தெற்கு) ஆகிய 23 வருவாய் கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களிடம் இணைய வழி மற்றும் இ-சேவை மையங்கள் மூலமாக பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்துத்துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், இறுபத்தி மூன்று கிராமங்களைச் சேர்ந்த கிராமக் கணக்குகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர்/ வருவாய் தீர்வாய அலுவலர் ஆய்வு செய்தார்.

முன்னதாக, சேவூர் மற்றும் அவிநாசி மேற்கு உள்வட்டத்தைச் சேர்ந்த வருவாய் கிராமங்களுக்கான நில அளவை சங்கிலி மற்றும் கோண கட்டை அளவுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர்/ வருவாய் தீர்வாய அலுவலர் அவர்கள் பார்வையிட்டார்.

இதனைத்தொடர்ந்து அவிநாசி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திடீர் ஆய்வு செய்தும் மற்றும் அவிநாசி மஹாராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூாரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை மையத்தையும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வின் போது, அவிநாசி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அவிநாசி வட்ட துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் உட்பட அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**